★ ரூபா விலை 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மார்கழி 28 ரபி. அவ் 27 இதழ் 335

யாழ்ப்பாணம் புதன்கிழமை 12—1—83

நீர்வேலி வழக்கு : தங்கத்துரையின்-

## தமிழக மனைவி நவமணி நீதிமன்றம் வந்திருந்தார்

(இ. கந்தசாமி)

நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்காக, இவ்வழக்கின் முதலாவது எதிரி தங்கத்துரையின் மனைவி திருமதி நவமணி தமது மகனுடன் சென்னையிலிருந்து வந்திருந்தார்.

சென்னையைச்சேர்ந்த திருமதி நவமணி தங்கத்துரை ஒரு பட்டதாரி. அவர் தனதுமகன் கரிகாலனுடன் (ஒன்றரை வயது) மேல்நீதிமன்றத்துக்கு நேற்றுக் காலை வந்திருந்தார்.

நீர்வேலி கொலை, கொள்ளை வழக்குவிசாரணை மேல்நீதிமன்றத்தில் நீதிபதி சி எல் டீ. மூனமலேயின் முன்னிலையில் நேற்று தொடர்ந்துநடைபெற்றது. நீதிமன்ற பார்வையாளர் பகுதியில் திருமதி தங்கத்துரை தமது கைக்குழந்தையுடன் இருந்தார்.

விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது எதிரி கூண்டில் நின்றுகொண்டிருந்த தமது தந்தையை [தங்கத்துரையைப்] பார்த்து பல தடவைகள் குழந்தை கரிகாலன் ''ஐயா ஐயா'' என்று அழைத்தபோது; நீதிமன்ற ஊழியரினால் குழந்தையின் தயார் எச்சரிக்கை செய்யப்பட்டார்,

மதிய போசன இடைவேளையில், தங்கத்துரையின் கைகளில் விலங்கிடப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டபோது குழந்தைதனதுகைகளை ஒன்றுடன ஒன்றுகப் பிசைந்து கொண்டு ''மாமா மாமா'' என்று கத்தியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குழந்தையின் அருகில் தங்கத்துரை சென்றுகொண்டிருந்தபோது ''சாப்பிட்டு வீட்டுவாறன்'' என்று வாஞ்சையுடன் அவர் கூறினர். அரசசட்டத்தரணிகளின் அங்கீகாரத்துடன் திருமதி நவமணி தமது கணவர் தங்கத்துரையுடன் சுமார் ஐந்து நிமிடம் உரையாடினர்.

திருமதி நவமணியை நான் சந்தித்தபோது தமது திரு

( 8ம் பக்கம் பார்க்க)

★ மட்டக்களப்பு -- கொழும்பு

# ரயில் விபத்து: சேவை பாதிப்பு!

## நாசவேலை காரணம்?

(கொழும்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிவந்த ரயில் வண்டி நேற்றுப் பிற்பகல், வியாங்கொடைக்கும் கம்பஹாவிற்கும் இடையில் தடம் புரண்டதால், பிரதான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டது.

விபத்துக்கான காரணம் பற்றி உயர்குழு ஒன்று விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

விபத்துப் பற்றித் தகவல் கிடைத்ததும், பொறியியலாளர், தொழிலாளர் குழு ஒன்று அவ்விடத்திற்கு விரைந்தது.

இவ்விபத்தினால் இரு ரயில் பாதைகளும் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு பாதையைச்சீராக்கி தபால் ரயில் சேவையை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு – கொழும்பு ரயில் வண்டி தடம்புரண்டதற்கு நாசவேலை காரணமாக இருக்கலாமா? என்று இப்பொழுது ஆராய்ந்து வருவதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கிளிநொச்சி பிரதிநிதித்துவம்:

## சலுகை வேண்டாம்

'அமிரு'க்கு கிருஷ்ணராசா கடிதம்

(நமது நிருபர் திருலோகமூர்த்தி)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திசபையில்சலுகை மூலம் மாவட்டசபை உறுப்பினர் பதவியை ஏற்கவிரும்பவில்லைஎன்று கிளிநொச்சித் தொகுதி பிரதிநிதி திரு.எஸ் கிருஷ்ணராசா, தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு.அமிர்தலிங்கத்திற்கு நேற்று அறிவித்துள்ளார்.

தொகுதிகளில் கிடைத்த வாக்குகள் விகிதாசாரப்படி, பட்டியலை மாற்றியமைக்கப் படவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

யாழ். மாவட்ட சபையில் உறுப்பினர் பதவி தருகின்றேம், என்றும் விரும்பினல் இப்பதவியை ஏற்கலாம் என்றும், கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் இம்மாதம் 2ம் தேதி திரு கிருஷ்ணராசாவிற்கு கடிதம் எழுதியிருந்தார்.

இக்கடிதத்திற்கு நேற்று அனுப்பிய பதிலிலேயே மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ''தங்களின் கடிதம் பெரும் வியப்பை கொடுத்தது. இந்த

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று மல்லாகம் கொலை வழக்கு விசாரணை

[யாழ்ப்பாணம்]

வடக்கில் பெரும்பரபரப்பை ஏற்படுத்திய மல்லாகம்கொலை வழக்கு இன்று யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்படவிருக்கிறது.

இவ்வழக்கில் 1976ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் திகதி மல்லாகத்தில் அழகன் நாகனைக் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

நீர்விநியோகப்பகுதி பொறுப்பதிகாரி

## 50 அடி உயரத்திலிருந்து தவறிவிழுந்து மரணம்!

மற்றெருவருக்கு படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரத்மலானை நீர் விநியோகப் பகுதி பொறுப்பதிகாரி நடராஜா கனகச்சந்திரன் 50 அடி உயரத்திலிருந்து தவறி விழுந்து மரணமானர்.

இவரது சடலம் நேற்று முன்தினம் இரத்மலானை நீர் விநியோகப் பகுதிக் கட்டடத்தில் வைக்கப்பட்டபோது உத்தியோகத்தர்கள் சென்று அஞ்சலி செலுத்தினர்கள்.

47 வயதான இவர், இவ்வார இறுதியில் நீர்வேலி நீர் விநியோகப் பகுதியைப் பொறுப்பேற்கவிருந்தார்.

இரத்மலானை நீர் விநியோகப் பகுதியில், பொறுப்பைப்

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில்

எங்களது நவீன வசதிகளுடனுன் குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் உலகில் தலைசிறந்த

## COMMODORE கொம்பியூட்டர்களில்

முழுமையான பயிற்சியும்

COMPUTER PROGRAMMING கல்வியும்

3ஆவது முறையாக ஆரம்பிக்கப்படவுள்ளது

கட்டணம்:- THEORY — Rs. 1000/-
COMPUTER APPLICATION - Rs. 1000/-

COMMODORE COMPUTER களின் ஏகவிநியோகஸ்தர்களான D.M.S. ELECTRONICS LTD., COLOMBO வின் ஆதரவில்

உளச்சார்புப் பரீட்சையில் சித்தியெய்தும் முதல் 75 மாணவர்களுக்கு மட்டும் இலவசக்கல்வி மீண்டும் அளிக்கப்படவுள்ளது

உளச்சார்புப் பரீட்சை:- 28-01-1983
விண்ணப்பக் கட்டணம்:- ரூபா 10/-
விண்ணப்பப் பத்திரங்களை நேரில் வந்து பதிவுசெய்து பெற்றுக் கொள்ளவேண்டும்

குறிப்பு: உத்தியோகம் பார்ப்பவர்களும் பார்க்காதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

## கன்ரேபியா கல்வி நிறுவனம்

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201 5812

யாழ். வலதுகுறைந்தோர் இல்லத்துக்காக

## யாழ். நகரில் சுவர்ணமுகி குழுவினரின் நடன நிகழ்ச்சி!

யாழ். லயன்ஸ் கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு ஆஸ்தான நர்த்தகி குமாரி சுவர்ணமுகியின் குழுவினரின் நடனநிகழ்ச்சி மீண்டும் அடுத்தவாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்குழுவில் இடம்பெற்றுள்ள பிரெஞ்சு மாணவி மஞேசய லெஜட் காடியாவின் நடன நிகழ்ச்சியும் இடம் பெறும்.

கடந்த முறை குமாரி சுவர்ணமுகியின் நடன நிகழ்ச்சி யாழ், பொதுசன நூலகபுனரமைப்பு நிதிக்காக நடைபெற்றபோது முன்கூட்டியே டிக்கட்டுகள் விற்பனையாகிவிட்டதால் இறுதி நேரத்தில் வந்தபலர் நடனநிகழ்ச்சியை பார்க்க முடியாமல் ஏமாற்றமடைந்தனர்.

பலரின் வேண்டுகோளைத் தொடர்ந்து யாழ். லயன்ஸ் கழகத்தினர் அடுத்தவாரம் யாழ்ப்பாணத்தில் குமாரி சுவர்ணமுகிகுழுவினரின் நடன நிகழ்ச்சியை ஏற்பாடுசெய்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் வலதுகுறைந்தோர் புனர்வாழ்வு இல்லநிதிக்காக, இந்த நடனநிகழ்ச்சியைப் யாழ். லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

(க)

# சிறு விளம்பரம்

## பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர்கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், Hotel Management குறுகிய காலப் பயிற்சி. ஆரம்பம்; 15-01-83 நேரில் விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும். The Shool of Computer Studies, 52/1, கனகரத்தினம் பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5796

## தேவை

நன்கு அனுபவம் பெற்ற ஒப்பரேற்றர் தேவை. தகுதியுள்ளவர்கள் சான்றிதழ்களுடன் பின்வரும் முகவரியில் உடன் தொடர்பு கொள்க. முகாமையாளர், ராஜநாயகி படமாளிகை, காங்கேசன் துறை. 5808


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமில்லாது மரணமெய்திய சுளிபுரத்தைச் சேர்ந்த அம்பலவாணர் அருள்மொழிதேவர் என்பவரின் மரணச்சொத்து விடயத்தில்

— மரணமெய்தியவர்

பண்டாரப்பிள்ளை அம்பலவாணர் கைம்பெண் நல்லபிள்ளை, சுளிபுரம்.

— மனுதார்

வழக்கு
இல: ரி/ 144

எதிராக
1. அம்பலவாணர் ஆறுமுகசாமி,
2. அம்பலவாணர்திருநாமம்
3. கந்தையா பொன்னம்பலமும்,
4. பெண் செல்லாச்சியும்,
5. செல்லத்துரை பாலசிங்கமும்,
6. பெண் பத்மராணியும் எல்லோரும்,

சங்கானை மேற்கு,
— எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கத்தைக் கொண்ட தத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983-ம் ஆண்டு தை மாதம் 19-ம் நாளன்று முற்பகல்8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

சு. வ. கணேசன்,
பதிவாளர்,

1983-01-07

வரைவு:
ஆ. குமாரசுவாமி,
மனுதாரின் சட்டத்தரணி

5800


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## தமிழகத்தில் சமயவிரிவுரை

[நாவலப்பிட்டி]

கடந்த இருவாரங்களாக சென்னையிலும் காஞ்சிபுரத்திலும் சமயவிரிவுரைகளாற்றிய ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா வியாழக்கிழமை தாயகம் திரும்புவார்.

சென்னை தர்மப்பிரகாஷ் கல்யாண மண்டபத்தில் சுவாமி ஹரிதாஸ்ஹிரி தலைமையில் டிசம்பர் 30-முதல் ஜனவரி முதலாம் திகதிவரை நடைபெற்ற ஆருக்ராபூரணை ஆராதனை விழாவில் அவர் உரையாற்றினார்.

காஞ்சிபுரம் இந்து தமிழ்க் கவிஞர் மன்றத்தின் ஆதரவில் புலவர் மா. வேங்கடேசன் இதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.


## யாழ்ப்பாண அக்கடமி
## க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட்1983
## மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் 17-1-1983ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல்செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

அதிபர்.
தொலைபேசி எண்: 22617,
376, பிரதானவீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 5698


இ. கமலநாதன்,
சட்டத்தரணி,

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற உரும்பிராயைச் சேர்ந்த சின்னப்பா அழகரத்தினம் கைம்பெண் பொன்னம்மா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

சின்னப்பா அழகரத்தினம் பரஞ்சோதி,
''அழகிய மாளிகை'',
உரும்பிராய்,

— மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 3698

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு மார்கழிமாதம் 10-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளைஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்,

1982-ஆம் ஆண்டு 11மாதம் 12-ஆந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

காரணம் காட்டும் திகதி 21-1-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்

5802

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 28ந் திகதி

புதன்கிழமை

[12—1—83]

மேடம்: பூமியால் லாபமுண்டு. புத்திரர் புகழும் சேரும், பொதுசனத்தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும், உடல் நலம் பாதிக்கப்படுமாகையால் வாய்வுப் பதார்த்தங்களை நீக்கவும்.

இடபம்: எதிர்பாராத விளைவுகளால் வேதனைப்படுவீர்கள். சிறியவிடயத்துக்குக்கூடகுறை கேட்க நேரிடும், தூர இடத்திலிருந்து செய்தியொன்று கிடைக்கலாம். பெரியோரைப் பகைத்துக்கொள்ள வேண்டாம்.

மிதுனம்: சொல்கையில் அதிகபற்றுதல் ஏற்படும். இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள். இன சன கொண்டாட்டங்களும்உண்டு. செல்வாக்குப் பெருகும்.

கடகம்: எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். நண்பர்கள் மூலம் கெடுதியுண்டு. கூட்டு வியாபாரத்தில் மோசடி நடைபெறும். நன்றாகச் சிந்தித்து செயலாற்றவும்,

சிங்கம்: தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும். புண்ணிய ஸ்தல யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படும். உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படும், உற்சாகமானதினம்.

கன்னி: வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும். தொழில்துறையில் மேலதிகாரிகள் ஆதரவைப் பெறுவீர்கள். சிலர் வாழ்க்கையில் அரசினர் விருந்துக்கும் இடம் ஏற்படும்,

துலாம்: மனைவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும. குழந்தைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும். வருமானத்திலும் உயர்ச்சி கிடைக்கும். புதுமனை கட்ட சிலர் ஆலோசிக்கலாம்.

விருச்சிகம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம். நண்பர்களால் நஷ்டமடைவர்.

தனு: ஆசை அலைகள் மோதும். வாழ்க்கையில் நிம்மதியற்றநிலை தென்படும், ஆணவப் போக்கினால்பிறரைப் பகைத்துக்கொள்ள நேரிடும். மன அடக்கம் வேண்டும்,

மகரம்: துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர் விடுவதற்கு இடமுண்டு. இனிமையான பேச்சின் மூலம் எல்லோரையும் கவர்ந்து கொள்வீர். அவசர அழைப்பு ஆச்சரியத்தைத் தரலாம்.

கும்பம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். கணதுடைப்பு வேலை நடக்கும். கவனம் செலுத்தவும். பெரியோரைப்பகைத்துக்கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

மீனம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படும். நீண்ட நாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும், கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சியைத் தரலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


# காணி தேவை

யாழ். குடாநாட்டில் கீழ் காணப்படும் இடங்களில் வீதிக்கு மிக சமீபமாக முப்பது (30) பரப்பிற்கு மேற்பட்ட காணித்துண்டுகள் தேவைப் படுகின்றன:-

| | |
|---|---|
| 1. பலாலி வீதி | வசாவிளான்வரை |
| 2. கண்டி வீதி | பளை வரை |
| 3. காங்கேசன்துறை வீதி | தெல்லிப்பளைவரை |
| 4. பருத்தித்துறை வீதி | அச்சுவேலி வரை |
| 5. மானிப்பாய் வீதி | பண்டத்தரிப்பு வரை |

விபரங்களுக்கு:-
தோட்டக்காணிப் பிரிவு
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 23680


## சைக்கிள் திருடர் கைவரிசை

(மயிலிட்டி)

வசாவிளான் கணேசயா வீதியிலுள்ள வீடொன்றில் புகுந்த திருடர் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர். இரவு 1-30 மணியளவில் திருமதி இராசையா என்பவரது வீட்டினுள் மதில் வழியாகப் புகுந்த திருடர், வீட்டுப்படலை பூட்டியபடி இருந்தும் அங்கிருந்து இரு சைக்கிள்களை எடுத்துச் சென்றுவிட்டனர்.


இதுவரைகாலமும் இப்பகுதியில் நடைபெறாத இச் சைக்கிள் திருட்டுதிட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இதுபற்றி காங்கேசன்துறைப் பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (கி)


## அறிவித்தல்
## கோவிலாக்கண்டி கிளை இலக்கம் 6ற்கான புதியகட்டிடம் நிர்மாணித்தல்

மேற்படி கட்டிடம் நிர்மாணிப்பதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. (பொருட்கள், கூலிகள் உட்பட) தேவையான விபரங்களையும், விண்ணப்பப்பத்திரங்களையும் சங்க வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா 25/-ம், மீளளிப்பு வைப்புப் பணமாக. ரூபா 2000/-மும் செலுத்துதல் வேண்டும். ரூபா 100000/- (ஒரு இலட்சம்) த்திற்கு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரராக இருத்தல் வேண்டும். சங்கத்தினால் வழங்கப்படும் நிபந்தனையை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி: 19-01-83 முற்பகல் 12-00 மணியாகும்.

பொதுமுகாமையாளர்
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1983-01-10 5806

உ
சிவமயம்



# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் துந்துபி வருடம் தைமாதம் 2-ம் திகதி [15-1-83] சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 6-00 மணிவரையில் வரும் சுபவேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் திருவளர் செல்வன் | எமது புத்திரி திருவளர் செல்வி |
| பேரின்பநாதன் | பவானி |
| (எஞ்ஜினியர் U. K.) அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் திருமணம்செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

மணமகளில்லத்தில் அன்று இராப்போசன விருந்தும் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

K. S. மயில்வாகனம் குடும்பத்தினர்
'யோகஸ்தான்'. 115, கொழும்புத்துறை றோட்,
யாழ்ப்பாணம்.

S. பாலகிருஷ்ணனும் பாரியாரும்
தபாற்கந்தோரடி,
தெல்லிப்பழை.

[5805]

# "பல இனங்கள்வாழும் நாட்டில் பிரிவினை, வகுப்புவாதம் தோன்றக்கூடாது!"

## பாரதி நூற்றாண்டுவிழாவில் பிரதமர்இந்திரா

புதுடில்லி, ஜன. 11

"பிராந்திய, வகுப்புவாதங்களுக்கு பல இனங்கள் வாழும் தேசத்தில் இருப்பவர்கள் ஒரு போதும்இடமளிக்கக்கூடாது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றுண்டுநிறைவு விழாக்கொண்டாட்ட வைபவமொன்றிலேயே அவர் இதனைத்தெரிவித்தார். இந்த வைபவத்தில் ஜனாதிபதி ஸெயில்சிங் உட்பட, மத்திய அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

பிரதமர் இந்திரா தொடர்ந்து தமதுஉரையில் கூறியதாவது, "மகாகவியின் பாடல்கள் தமிழ் மொழியில் இருந்த போதிலும், அவரது எண்ணம் நோக்கம் ஆகியன ஒரு சகோதரத்துவ பாரதத்தைக்காண்பதாகவே இருந்தது. அதுமட்டுமல்ல முழுஉலகையும், சகோதரத்துவ உணர்வுடன் நோக்குவதாகவுமிருந்தது.

இவரது சுதந்திர உணர்வு, தேசிய ஒற்றுமை மனப்பான்மை ஆகியனவற்றை அறியாதுள்ளவர்கள் நிச்சயம் அறிந்து அதற்மைய ஒழுக வேண்டுமென்றார்.

ஜனாதிபதி ஸெயில்சிங் தமது உரையில்; "மகாகவி பாரதி தமது பாடல்களை தேசிய ஒற்றுமை, சுதந்திர உணர்வு ஆகியவற்றுக்காக அர்ப்பணஞ் செய்துள்ளார்.

அவரது ஒவ்வொரு பாடலும் புத்துணர்வை வழங்குபனவாக இருக்கின்றது" என்றார் இந்த நூற்றுண்டுவிழா வைபவத்தில் பாதுகாப்பமைச்சர் திரு. ஆர்.வெங்கட்ராமன், தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் உட்பட பல கல்விமான்களும் கலந்துகொண்டு பாரதியாருக்குப்புகழ் அஞ்சலி செலுத்தினர். (கி)

## ஆப்கானிஸ்தான் நிலைமை: அமெரிக்கா மீது ஆப். அரசு கடும் தாக்கு!

காபுல், ஜன. 11

"ஆப்கானிஸ்தானைச் சுற்றியுள்ள நிலைமைகளுக்குத் தீர்வு காணுவதற்கான சரியான வழி 1980 மே 14ம் திகதியும், 1981 ஆகஸ்ட் 24ம் திகதியும் ஆப்கான் அரசு முன்வைத்தஆலோசனைகளின் அடிப்படையில் முயல்வதுதான். இதன்மூலமே ஆப்கானிஸ்தான் ஜனநாயகக் குடியரசுக்கு எதிரான ஆயுத ஆக்கிரமிப்புக்கு முடிவு காணவும்; ஆப்கானிஸ்தானின்சுதந்திரம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கௌரவிக்கவும் வழியேற்படும்" என்று ஆப்கான் அரசு வெளியிட்ட பிரகடனம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி றீகன் வெளியிட்ட அறிக்கை குறித்து ஆப்கான் அரசு குறிப்பிடுகையில், ஆப்கான் புரட்சியின் ஆரம்பநாள் தொட்டு அமெரிக்கா, நமது நாட்டுக்கெதிராகப் பிரகடனப் படுத்தப்படாத யுத்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன், சீர்குலைவுவாதிகளுக்கு ஆதரவளித்து ஊக்கமளித்தும் வருகிறது. புதிய தலையீடுகளுக்கு அமெரிக்கா இப்போது புதிய முயற்சிகளை எடுத்து வருகிறது" என்று தெரிவித்துள்ளது

"அண்மையில் ஆப்கானுக்கு எதிராகப்பிரகடனப்படுத்தாத யுத்தத்தைத் தமது அரசு தொடர்ந்து நடத்தும் என்று ஜனாதிபதி றொனல்ட் றீகன் தெளிவாகத் தெரிவித்துள்ளார். எதிர்ப்புரட்சிக் கூலிப் படைகளுக்குத் தொடர்ந்து உதவி வழங்கி ஊக்குவிக்கவும் வெள்ளைமாளிகை தீர்மானித்துள்ளது. இஸ்லாத்தைக்காப்பாற்றவே இந்த நடவடிக்கை என்று அமெரிக்கா கூறுவதெல்லாம் மாய்மாலம். சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானுக்கு வழங்கும் உதவியைத்தவறாகத் திரித்துக்கூறும் றீகன்,எல்சல்வடோரிலும், நிக்கரகுவாவிலும் சிலி, எதியோப்பியா, அங்கோலா, தென்னாபிரிக்கா மற்றும் சுதந்திரநாடுகள் பலவற்றில் அமெரிக்கா நிகழ்த்திய கொலைகார நடவடிக்கைகளை நினைத்துப் பார்க்கவேண்டும். ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துகிறது என்ற பொய்யையும், அமெரிக்கா வெட்கமில்லாமல் திரும்பக் கூறி வருகிறது" என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 15 சிறை ஊழியர்களை பணயம் வைத்த 500 கைதிகள்

நியுயோர்க், ஜன.11

நியுயோர்க்கிலுள்ள மாநிலச் சிறைச்சாலையொன்றில் 15 சிறைச்சாலை ஊழியர்கள் 500 கைதிகளால் பணயம் வைக்கப்பட்டனர்!

சிங்,சிங் என்று பிரபலமான இந்த சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை இரவே இந்த பணய நாடகம் நடந்தது.

சிறை ஊழியர்கள் இரும்புக் கம்பியின் ஊடாக வழமைபோல உரையாடிக்கொண்டிருந்த வேளையிலேயே திடீரென வேறு சில கைதிகளால் சுற்றி வளைக்கப்பட்டனர்.

பணய நாடகத்தை நடத்தியவர்கள் துடைப்பந்தடிகளையும், ஏனைய சிறு தடிகளையும் ஊழியர்களிடமிருந்து பறித்து தமது ஆயுதங்களாக அவற்றைப்பாவித்தனர்!

ஆரம்பத்தில் 16 பேரே பணயம் வைக்கப்பட்டனர். ஆனால் கைதி ஒருவர் கேட்ட போதை வஸ்தினை ஊழியர் ஒருவர் வழங்கியதையடுத்து அந்த ஊழியர் விடுவிக்கப்பட்டார்!

லூயிஸ்னிம் என்ற சிறைத்திணைக்கள அதிகாரி, "இந்தப் பணயத்தை நடத்தும் கைதிகளின் கோரிக்கையென்னவென்பது தமக்கு தெரிவிக்கப்படவில்லை என்றார்.

இச்சிறைச் சாலையில் 600 கைதிகள் உள்ளனர். பணய நாடகத்தை நடத்தியவர்களைத்தவிர ஏனைய 100 கைதிகளும் உடற்பயிற்சியில் கலந்து கொண்டிருந்தனர்! (கி)

## அமெரிக்க சமாதான தொண்டர் குத்திக் கொலை!

### மலேசியாவில் சம்பவம்

கோலாலம்பூர், ஜன. 11

மலேசியாவில் இருக்கும் அமெரிக்க சமாதான தொண்டர் படையைச் சேர்ந்தஒருவர் கத்தியால் குத்திக்கொலைசெய்யப்பட்டுள்ளார்.

கடந்தவாரம் கோலாலம்பூரில் உள்ள மதுபானச்சாலையொன்றுக்கு வெளியில் வைத்தே மைக்கேல் குவாய்ட் என்ற இந்தத் தொண்டர் கொல்லப்பட்டார். இவர்வயது 38 ஆகும்.

நியுயோர்க்கைச் சேர்ந்த இவர், நள்ளிரவுக்கு சற்று நேரத்துக்கு முன்னர் மதுபானச்சாலையிலிருந்து தம்நண்பர் ஒருவருடன் வெளியே வந்து கொண்டிருந்தார். அப்போதே இவர் சிறு கூட்டத்தவரால் கொல்லப்பட்டார்.

இக்கொலைக்கான காரணங்கள் எதுவும் தெளிவாகத்தெரிவிக்கப்படவில்லை.

திருமணமாகாத குவாய்ட் மலேஷியாவில் கடந்தஏழுவருடங்களாக இருந்து வருகிறார். அத்துடன் இவர் தாம் அங்கம் வகிக்கும் தொண்டர் சேவையின் வரலாறுபற்றியும் புத்தகமொன்றை எழுதிவருகிறார்.

மலேசியாவில் சுமார் 50 அமெரிக்கதொண்டர்கள் பணியாற்றுகின்றனர். (கி)

## சீக்கியர் தலைவர்கள்-அரசு சமரசப்பேச்சு ஆரம்பம்

புதுடில்லி, ஜன. 11

சீக்கிய இன தீவிரவாதிகளான அகாலிதள் கட்சியினருக்கும், இந்திய அரசுக்குமிடையே இன்று சமரசப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின்றன.

அரசுசார்பில் உள்துறை அமைச்சர் திரு. பி,டி.சேத்தி, பாதுகாப்பமைச்சர் திரு. வெங்கட்ராமன், எரிசக்தி அமைச்சர் திரு. சிவ்சங்கர் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

அகாலிதள் சார்பில் ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட கமிட்டி ஒன்று கலந்துகொள்கின்றது.

பஞ்சசப் மாநிலத்தின் தலைநகரான சண்டிகாரிலேயே இந்தப்பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. உள்துறை அமைச்சின் செயலாளர் இதற்கானஒழுங்குகளைச்செய்துள்ளார்.

அரசு, அகாலிதள்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பதை ஒன்பது பிரதான எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன. அத்துடன் இக்கட்சிகள் நேற்று புதுடில்லியில் கூடி இப்பேச்சுவார்த்தைகள் நல்ல தீர்வைக் காணவேண்டுமென்றும் வலியுறுத்தின.

பஞ்சசப் மாநில முதலமைச்சர் திரு. தர்பாராசிங் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் இப்பேச்சுவார்த்தைகள் பற்றி ஏற்கனவே உரையாடினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பஞ்சாப் மாநிலத்தில் சுயாட்சி கோரிவரும் சீக்கிய இனத்தவரான அகாலிதள் கட்சியினர், அண்மைக்காலங்களில் தீவிரமாக தமது பிரிவினைக்கோரிக்கையை முன்வைத்து செயலாற்றிவருவதும் அரச வைபவங்களை குழப்பப் போவதாகப் பயமுறுத்தி வருவதும் வாசகர் அறிந்ததே. (கி)

## 55-வது தமிழக விளையாட்டுப் போட்டிகள்

மதுரை, ஜன. 11

ஐம்பத்தைந்தாவது தமிழ் நாடு விளையாட்டுப்போட்டிகள் மதுரையில் நேற்று ஆரம்பமானது.

தமிழகத்தின்பிரதான இடங்களுக்கிடையே நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டிகளை மதுரைமாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆளுடையபிள்ளை தொடக்கிவைத்தார். [கி]

## 'ரஞ்சித்' கோப்பையை தமிழ்நாடு வென்றது!

சென்னை, ஜன. 11

"'ரஞ்சித்' கோப்பைக்கான கிரிக்கெட் பந்தயத்தில் தமிழ்நாடு கிரிக்கெட் அணி, கேரள கிரிக்கெட் அணியை பத்து விக்கட்டுகளால் வெற்றிபெற்று அக்கோப்பையை தனதாக்கியது.

பாலக்காட்டில் இந்த கிரிக்கெட் பந்தயம் மூன்று தினங்களுக்கு நடைபெற்றது.

தமிழ்நாடுஅணி முதல் இன்னிங்ஸில் நான்கு விக்கட்டுகள் நட்டத்துக்கு 347ஓட்டங்களைப் பெற்று தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

கேரளஅணி சகலவிக்கட்டுகளையும் இழந்து 215 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் கேரளா 3 விக்கட்டுகள் நட்டத்துக்கு 136 ஓட்டங்களையும், தமிழ்நாடு இழப்பெதுவுமின்றி 4 ஓட்டங்களைப்பெற்றது.

இறுதியாக தமிழ்நாடு அணி 10 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது. இந்தப்பந்தயத்தின் சிறந்தவீரராகதமிழ்நாடுஅணியைச் சேர்ந்த டி. ஏ. சேகர் தெரிவானார்.

தமிழ்நாடு அணிக்கு முன்னாள் இந்திய அணி காப்டன் திரு.வெங்கட்ராகவன்தலைமை தாங்கினார். (கி)

## சமாதான சபை

(நீர்வேலி)

கிராமத்தில் நடைபெறும் பிணக்குகளையும், சச்சரவுகளையும் சமாதானமான முறையில் தீர்த்து வைப்பதற்கு உரும்பராய் கிராமோதய சபை சமாதான சபை ஒன்றை அமைத்துள்ளது. சமாதான சபையின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்;- செ. ஐயாத்துரை, செயலாளர்: வை. கதிரவேலன். உறுப்பினர்கள்:- இ. நவரத்தினக்குருக்கள், சு. அப்புத்துரை, க. சிவஞானம், பொ. ஸ்ரீ நடராசா, இ. கந்தசாமி, ப. இராசதுரை, அ. குலநாயகம். [அ]

## ஆலயபரிபாலன சபை

(அரியாலை)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. எஸ். இராசரத்தினமும், உபதலைவர்களாக வைத்திய கலாநிதி இ. நன்னித்தம்பி, திரு.க.ஞானச்செல்வம் ஆகியோரும், செயலாளர்களாக திருவாளர்கள் அ. முதலித்தம்பி,செ. சிவராசலிங்கம் ஆகியோரும்,பொருளாளராக திரு. அ. துரைராசாவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

## மீண்டும் கிராமியவங்கிகள்

(நீர்வேலி)

வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் கிராமிய வங்கிகள் மீண்டும் நீர்வேலி வடக்கு, கோப்பாய், உரும்பராய் ஆகியன இம்மாதம் 16ம் திகதியில் இருந்து இயங்க இருக்கின்றன இதற்கான ஏற்பாடுகளைத் தலைவர் திரு செ.சபாரத்தினம் முன்னின்று செய்துவருகின்றார். (அ)

0 0

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு இராஜராஜேஸ்வரி அம்பாள் அடியார்சபை விசேட ஆலோசனைக்கூட்டம் இம்மாதம் 15ம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

திருப்பணி வேலைகளை ஆராய்வதற்கு அடியார் சபைத் தலைவர் திரு மு.பரராசசிங்கம் தலைமையில் நிகழும் இக்கூட்டத்தில் திரு ஈழத்துச்சிவானந்தனின் சிறப்புரை இடம்பெறும். (ப)

**மணிவாக்கு**

இலக்கணத்தைவிட இன்சொல்லே உயர்தரமானது.
— எவ். ஜீ வ்பௌளர்

# நமது நோக்கு

## பழம்பெரும் பண்பின் ஆதர்சம்

நோயிலோ அல்லது வறுமையிலோ அவஸ்தைப்படும் ஒருவரை ஒரு கிறிஸ்தவர் அல்லது மகமதியர் கண்ணுற்றால் தம்மாலான உதவி உடனடியாகவே செய்யமுயல்வார்; ஒரு இந்து அல்ல பௌத்தரோ அவ்வாறு உதவுவது தவறென்றும் அந்த மனிதன் தனது கர்மவினையின்பயனை அனுபவித்தே தீரவேண்டுமென்றும் சொல்வாராம்.

ஊழ், கர்மவிதி, தலையெழுத்து - இவற்றைத் தவறாகப் பொருள் கொள்வதை விளக்கவே இக்கதை உருவாகிப் பரவியிருக்கலாம். 'தலைவிதி'யைத் தவறாக விளங்குவதற்கு எங்கள் சமூக வாழ்க்கை நல்ல ஆதரவை அளிப்பது நாம் கவலையுடன் அவதானிக்க வேண்டிய தொன்றாகும்.

வாழ்க்கையில் வசதியற்றவர்களுக்கு நோயால், வறுமையால் பீடிக்கப்பட்டுத் தலைதூக்க இயலாத நிலையிலிருப்பவர்களுக்கு எங்கள் சமுதாயத்தில் - குறிப்பாக சைவ சமூகத்தில் நிறுவன ரீதியில் நிவாரணமளிக்கும் சேவை வறண்டிருப்பது உண்கூடு.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷனறியின் உலகளாவிய சேவையே சைவ மக்களுக்குத் தஞ்சமளிக்கின்றதென்பதை நாம் இன்றும் உணராத நிலையில் இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் பழம் பெரும் பண்பு சங்க காலத்தில் காணப்பட்டதும் பின்பு அதன் சமுதாய கட்டுக்கோப்பு ஆன்மீகத்தையும் இவ்வுலக வாழ்வையும், இருகூறுகளாகப் பிரித்துவிட்டதும் உண்மைதானோ என்று சந்தேகிக்கும் நிலையில் எங்கள் சமூக வாழ்வு நிலைகுலைந்திருக்கிறது. தனிமனிதனின் வாழ்வு தாழ்வு சமுதாயத்தின் பொறுப்பல்ல என்ற நிலைக்கு இறங்கிவிட்டது.

சமய வாழ்வு என்றால் மண்ணுலக வாழ்வைப் பொருட்படுத்தாது வாழ்தல்; வறுமை, சிறுமை என்பன ஆன்மீக ஈடேற்றத்துக்கு அவசியமானவை என்று கூட நம் புமளவிற்கு கருத்து விகாரம் செறிந்திருக்கிறது.

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என்று சம்பந்த சுவாமிகள் மக்களைத் தட்டி எழுப்ப வேண்டிய இழிவுநிலை தமிழ்மக்கள் மத்தியில் ஒருகாலம் இருந்திருக்கிறது. அந்த நிலையில் உண்மைச் சமயமே உதவவல்லது என்று சாதித்தவர்கள் சைவ நாயன்மார்கள் குறிப்பாக நால்வர். பெருமக்கள்.

அறுபது ஆண்டு சோஷலிச வாழ்வில் வெற்றி கண்ட ரஷ்யநாடு வெளியிடும் கருத்து நாம் மேற் கூறிய குறைகளை ஆதாரமாகக் கொண்டு ஆன்மீகத்தின், அறவாழ்வின் பெருமையை மட்டுப்படுத்துகின்றது.

''மனிதாபிமானமே சோஷலிசத்தின் அத்திபாரம்; மனிதாபிமானம் என்பது ஆன்மீகத் துறைக்குள் மட்டும் தொழிற்படுவதொன்றல்ல, உலோகாயுத உற்பத்தித் துறையினுக்குள்ளும் செறிந்திருப்பதே மனிதாபிமானம்''

இந்தக் கருத்து சோவியத் ரஷ்யாவின் 60ம் ஆண்டு நிறைவு விழாவின் அறிக்கையில் இடம் பெறுவது புதினமல்ல.

முதலாளித்துவ நாடுகளின் சமூக வாழ்க்கையில் ஆன்மீகமும், உலோகாயதமும் இருவேறு பிரிவுகளாக இயங்குவது எமது அனுபவத்தில் கண்ட உண்மை. வெள்ளி அல்லது ஞாயிறு தெய்வத்துக்கென்று வாழ்தல்; மற்றைய நாட்களில் தமக்கென வாழ்தல் அதன் அமைப்பு முறை.

பரவலாக இந்த நோக்கே சமுதாயத்தைப் பிணித்துவிட்டதால் தெய்வம் சமயம்—இவையெல்லாம் நாட்டைக் கெடுக்கும் சக்திகள் என்ற முடிவு எடுக்கும் அளவிற்கு இவை குன்றிப்போன நாடுகள் பல.

இந்தியாவின் பிரதமர் நேரு வாலிப வயதில் இவ்வித கொள்கையில் ஊறியிருந்தபோது, தமது குருவாகிய மகாத்மா காந்தி, பாரத நாட்டின் தனிச்சிறப்பு, அதன் சமய பண்பாடும் பாரம்பரியமுமே என விளக்கித் தம்மைப் பாதுகாத்தாரென்று தமது சுயசரிதையில் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மக்களின் என்றும் வாராத செல்வம் தெய்வ நம்பிக்கை; தெய்வ நம்பிக்கையில் பிறந்த அன்புள்ளம் என்றும் பொய்யாத உள்ளம்; பொய்யாத உள்ளம் தனக்கென வாழாது பிறர்க்குரியவன் என்று வாழும் உள்ளம்.

நாம் இவ்வருட முதலாம் நாளில் குறிப்பிட்டது போல், இவ்வாறு ''என்பும் பிறர்க்குரிய''ரென்று வாழ்ந்த பெரியார் டாக்டர் சுப்பிரமணியம் பண்டைக் கால கொடை வள்ளல்களை நினைவூட்டுவதோடு, இன்றைய மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியின் உச்சகலையைக் கண்ட வைத்திய ரிஷிபோல் வாழ்ந்த பெருமையுடையவர்.

இத்தகைய மனிதர் ஒரு சமுதாயத்துக்கோ, ஒரு ஊருக்கோ உரியவர் அல்லர்; அவர்கள் உலகத்தின் செல்வம் ஆகிவிடுகிறார்கள்.

இக்காரணம் பற்றியோ என்னவோ தெரியாது; இந்த நாட்டு மக்கள் எம் மதத்தினர்க்கும், எந்த இனத்தவர்க்கும் உதவிய தமிழ்ப்பெருமகனை, மகானை நாடும் சமூகமும் மறந்திருக்கிறது.

அவர் வாழ்ந்து வந்த ''எண்கோணக் கட்டிடம்'' மக்கள் சொத்தாகி அதில் அவருடைய நாமம் என்றும் நிலைக்கும் வகையில் பொது நல சேவை புரிவதே மிகப் பொருத்தமானது.

# மறந்துவிட்ட டாக்டர் பி. எஸ். ஸை இனியாவது நினைவு கூருவோம்

**வித்துவான் சின்னத்தம்பி ஆறுமுகம்**

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் நம்நாட்டுப் பெரியார் இருவரை முற்றாக மறந்தேவிட்டனர். அவர்களின் ஒருவர் 'டாக்டர் பி. எஸ்.' என்று அழைக்கப்பெற்ற மருத்துவ கலாநிதி, கொடைவள்ளல் சுப்பிரமணியம் அவர்கள் யாழ். நகரின் மத்தியில் அவருடைய பெயரால் இலங்கும் 'சுப்பிரமணியம் பூங்கா' மவுனமாக அவர் பெயரைச் சாற்றுகின்றது. நாம் மறந்துவிட்ட



மற்றொரு பெரியார் 'நியாயவாதி 'இந்து போர்ட்' இராரத்தினம் அவர்கள். அவரைப் பற்றி ஒரு கட்டுரை பின்னர் வெளிவரும், டாக்டர் சுப்பிரமணியம் உடல் நோய் தீர்த்தவர்; கொடைவள்ளல். எந்தப் பொதுத் தருமத்துக்கும் முதலில் பணம்கொடுப்பவர் வள்ளல் சுப்பிரமணிய டாக்குத்தரே. ஏழைகளுக்கு இலவச மருந்துங் கொடுப்பார். பஸ்வண்டிக்குபணமும்கொடுப்பார்வரா வழியற்றவர்க்குவாரி

(பி. எஸ். என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட வைத்திய கலாநிதி பி. சுப்பிரமணியம் அவர்களின் நூற்றுப்பத்தாவது நினைவுதினம் இன்றாகும். இதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.)

வழங்குவார். பள்ளிக்கூடம் கட்டப் போகிறோம் என்றால் பதினாயிரக்கணக்கில் அள்ளி வழங்குவார். நூல் நிலையம், வைத்தியசாலை, அகதிகள் விடுதி, சனசமூக நிலையம், தமிழ்வளர்ச்சிக் கழகம், இசை வளர்ச்சிக் கழகம், முத்தமிழ் கழகம் இப்படி எத்தனையோ! எதற்கும் முதலில் பிள்ளையார் சுழி இட்டு நிதிவழங்குவார். 'டாக்டர் பி எஸ்' அவர்களே. அவர் பழம்பெரும் வைத்திய கலாநிதி. மகாண அறுவை வைத்திய நிபுணர். காலி முதல் யாழ்ப்பாணம் வரை அவருடைய வைத்தியத் திறமையை நன்கு அறியும் முதலில் அவருடைய வைத்தியத் திறனையும், மனிதப் பண்பையும் சிந்திப்போம். அடுத்து அவருடைய கொடைத் திறனையும் தொண்டுகளையும் பார்ப்போம்.

### இரு ஆஸ்பத்திரிகளும் பி. எஸ்.ஸின் சேவையும்

யாழ்ப்பாணத்து மக்களின் நோய்களைத் தீர்க்கக்கிடைத்த வைத்திய சாலைகளுள் பழையது மானிப்பாய் கிறீன் நினைவு ஆசுப்பத்திரி. அடுத்தது மூளாய் கூட்டுறவு ஆசுப்பத்திரி. இவை இருபெருநிலையங்கள் ஆனால், தனிமனிதனாக நின்று வைத்திய கலாநிதியாக நோய்தீர்த்த புனித வைத்தியர் புண்ணியவான் யாழ்ப்பாணம் டாக்டர் சுப்பிரமணியம் அவர்களே. அரை நூற்றாண்டுக்கு மேலாக அவருடைய பெயர். பொதுமக்களின் உள்ளத்தில் இணைந்து நின்றது எந்த நோயாளியும் அவரிடம் சென்றால் தன் நோய் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் செல்வான்.

இதுவே நோயாளியின் முதல் எண்ணம் கடினமான நோயையும் பெரிதாகக் காட்டாமல் அவருடைய வைத்தியந் தொடங்கும். எப்படியும் குணப்படுத்தி அனுப்புவார். அவரால் குணப்படுத்த முடியவில்லை என்றால் அப்பால்

ஒரே முடிவுதான்! அவருடைய வைத்தியம் பெரும் நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்படும். இனிய பேச்சு அதுவும் மெல்லத்தான் பேசுவார். மருந்து எழுதுவார். எவருக்கும் விளங்காத பிரமன் எழுத்து அது ஆனால் அவருடைய மருந்துக் கலவையாளன் மட்டுமே அதனை அறிவான். நோய் நிச்சயம் தீர்ந்துவிடும். பார்த்த பார்வையும், சிரித்த சிரிப்பும், தொட்ட தொடு

கையும் நோயில் முக்காற் பங்கினை நீக்கிவிடும். அவர் இருதயத்துடிப்பறியும் கருவியை நோயாளியின் தலையில் வைத்தாலும் நோயாளி அதனை ஒரு வரப்பிரசாதமாகவே ஏற்று ஏதோ பெரும் ஆராய்ச்சி நடப்பதாக எண்ணுவான்.

### அறிவாளி

'பி எஸ்' அவர்கள் பெரிய அறிவாளி. ஒரு முறை தமது முகாமையிலுள்ள சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் விளையாட்டுத்துறைபற்றி ஒரு மணிநேரம் பேசிவிட்டார். கேட்டவர் வியப்புற்றனர். அவர் பெரும் ஆராய்ச்சியாளர் அறிஞர்திலகம் ஆசைகள் அற்ற ஒரு துறவி, உண்பது குறைவு, போதியளவு உறக்கம்கொள்ள அவரைப்பிடித்த தொய்வு நோய் இடங்கொடுப்பதில்லை. ஆயினும் தொண்ணூறு வயதுக்குமேல் அவர் வாழ்ந்து, யாழ்ப்பாணத்தை வாழவைத்தார் சில புதிய கலவைகள் அவரிடம் இருந்தன. அவை நோயை அடுத்த கணமே நிறுத்த வல்லவை. இருமல் நோய்க்கு அவர் வைத்திருந்த கலவை மருந்து தனித்துவம் வாய்ந்தது. அவருடைய எண்கோண மருத்துவ நிலையம்

இன்றும் என் மனக்கண்முன் மருந்தும் திருந்தும், மதியும் கொடுத்தும் உழைத்தும் நின்ற மருத்துவ மேதை 'டாக்டர் பி.எஸ்.' அவரை மறந்த யாழ்ப்பாண மக்களாகிய நாம் நன்றிகெட்டவர்கள்.

அடுத்து அவருடைய கொடைத்திறனையும், பொதுத் தொண்டுகளையும் சிறிது தொட்டுப்பார்ப்போம்.

(5ம் பக்கம் பார்க்க)

## அடக்கம் இனி எங்கே ஆரிடத்தே ஏகும்?

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

மனிதருள்ளும் தேவர் மனிதஉருத் தாங்கி
இனிதுவர்வ துண்டேயாம் எங்கள்-கனியமிர்தம்
டாக்டர் சுப் ரஹ்மண்யம்
இவ்வுலகத் தெய்வங்காண்
மாப்பெரியார் இந்த மகான்.

இன்சொல்லே பேசி இனிய நகைசெய்து
துன்பெல்லாம் போக்கியருள் தூமணியே-
எவ்வெல்லாம்
நெக்குருக வைத்து நெடிதகன்ற இத்துயரம்
எக்கணமுந் தீரா தினி.

கையால்தை வந்து கருணை மழைபொழிந்து
மெய்நோய்க ணீக்கியருள் மேலோனே-ஐயாஉன்
அன்பொழுகித் தேக்கெறியும் அன்றலர்ந்த
மாமுகத்தை
என்றைக்குக் காண்போம் இனி.

அடக்கம் இனிஎங்கே ஆரிடத்தே ஏகும்
கடக்கரிய நின்குணங்கள் காண-மடக்கொடியாள்
பூமித்தாய் என்செய்வாள் புண்ணியலோ
கப்புக்காய்
ஆமிக்கார் இவ்வுலகி னார்.

புத்தகத்தைக் காட்டிப் புதுமுறுவல்
செய்தொருநாள்
அத்த னுணைத்தன்பா லாட்டினாய்-இத்தகவு
ஈறாய் முடிந்ததனை எண்ணுதொறு
மெண்ணுதொறும்
நீருகிவிட்டதென் நெஞ்சு.

(வைத்தியகலாநிதி சி. சுப்பிரமணியம் அவர்களின் மறைவையொட்டி அப்பொழுது பண்டிதமணி அவர்கள் பாடிய இரங்கற் பாக்கள்.)

## கலைத்தொண்டர் பொன்னம்பலம்



வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தோரில் அண்மையில் அமரரான சமூகத் தொண்டர் புங்குடுதீவு திரு. சண்முகம் பொன்னம்பலமும் ஒருவர் என்பதை அன்னாரது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட பல்தரப்பட்ட பலநூற்றுக் கணக்கான அன்பர் கூட்டம் எடுத்துக் காட்டிற்று. பெரியோர் சிறியோர் என்ற பேதமின்றி யாருடனும் இன்முகங்காட்டி இன்சொற்பேசும் இயல்பான தன்மை அன்னாரது தனிச் சிறப்பாகும். இளம் வயதிலிருந்தே கலைத்துறையிலும் சமூகத் தொண்டிலும் ஈடுபாடு கொண்ட அமரர் பொன்னம்பலம் தாம் தொழில் புரிந்த இடங்களிலும் சங்கங்கள் அமைத்து அருந்தொண்டாற்றினார்.

மலேயா நாட்டில் புகையிரத இலாகாவில் கடமையாற்றிய காலத்தில் அங்குள்ள தமிழர்களுடன் சேர்ந்து நாடக சபா அமைத்து நாடகங்கள் பலவற்றை மேடையேற்றியதோடு, தானும் அந்நாடகங்களில் முக்கிய பங்கேற்று நடித்துள்ளார். அவரது நடிப்பாற்றலையும் இனிமையான குரல் நயத்தையும் பலரும் பாராட்டியுள்ளனர். அவரது கலையார்வம் காரணமாகவே 1977-ல் புங்குடுதீவில் அமைக்கப்பட்ட அம்பலவாணர் அரங்கின் நிர்மாண வேலையில் முழுநேரத் தொண்டராக நின்று மேற்பார்வை செய்ததுடன் அவ்வேலையில் ஈடுபட்ட பலரது தேவைகளையும் குறிப்பறிந்து பூர்த்தி செய்தார், அவ்வரங்கில் கலைப்பெருமன்றம் எடுக்கும் ஒவ்வொரு விழாவிலும் முன்னின்று உழைத்த அமரர் தொண்டர்களுக்கெல்லாம் தொண்டராக விளங்கினார்.

மலேயா நாட்டிலிருந்து இலங்கை திரும்பிய இவர் கொழும்பில் பணியாற்றிஓய்வு பெற்றபின் கடமையாற்றி இளைப்பாறினார். இளைப்பாறியபின் தீவுபகுதியின்போக்குவரத்துக் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு தமது அயரா முயற்சியினால் சப்த தீவு மோட்டார் படகுச்சேவையை நடாத்தி கஷ்டபிரதேச மக்களின் நன்மதிப்பை பெற்றார்.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்' எனும் வள்ளுவன் வாக்கிற்கமைய அமரரது கலையார்வம் அன்னாரது இருபுதல்வர்கள் மூலம் சங்கீதத்துறையில் தொடர்கிறது பொய்யுடம்பை விட்டுப் புகழுடம்பெய்திய அன்னாரது அந்தியேட்டி நடைபெறும் தினமான இன்று அவர் ஆத்மசாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

- மு. இராமலிங்கம்

## நாகேஸ்வரி கொலை வழக்கு:

# கணவன் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதி

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கொலை வழக்கில் எதிரி 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இப்பிணைமனு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

காரைநகர் மேற்கு தங்கோடையைச் சேர்ந்த மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் என்பவர் அவரது மனைவி நாகேஸ்வரியைக் கொலைசெய்ததாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த வருடம் ஏப்ரல் 5-ம் திகதிமுதல் ரிமாண்டில் இருந்து வருகிறார்.

எதிரியான பாலசுப்பிரமணியத்தைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணை மனுவை சட்டத்தரணி இராஜன் செல்லத்தம்பு தாக்கல்செய்த மனுதொடர்பான சமர்ப்பணங்களை முன்வைத்தார். அரசதரப்பில் அரச சட்டத்தரணி ஸ்ரீகந்தகுமார் ஆஜரானார்.

நீதிபதி எதிரியை 5000ரூபா பிணையில் செல்ல அனுமதித்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பொலிஸ் நிலையத்தில் சமுகமளிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டார். (க)

கணவன்மீது கரைகடந்தபாசம்! முடிவு

# குழந்தையை அணைத்தபடி கிணற்றில் குதித்தாள்!

## குமரபுரம் சோகமயம்

(கிளிநொச்சி)

இருபத்தெட்டு வயதான இளம் தாயும் அவரது இரண்டரை வயதுப் பாலகனும் பிணங்களாக ஆழக்கிணற்றிலிருந்து மீட்கப்பட்டனர்.

ஈராக் நாட்டிற்குச்செல்லும் தமது கணவனின்முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு இப்பெண் மேற்கொண்ட முயற்சி தான் இந்த இரு உயிர்ப்பலிகளும்.

சடலங்கள் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டபோது தாய் தனது குழந்தையை அணைத்தபடி காணப்பட்டது. இச்சம்பவத்தால் பரந்தன் குமரபுரம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

சந்திரபோஸ் தவதேவராணி (28 வயது) இவரது பிள்ளை சந்திரபோஸ் சுதர்சன் (2½வயது) ஆகியோரே மரணமானவர்கள். இம் மரணங்கள் சம்பந்தமான விசாரணையைக் கிளிநொச்சி பதில் நீதவான் திரு. கே. டபிள்யு. கார்த்திகேசு மேற்கொண்டார். பொலிஸ் விசாரணையை கிளிநொச்சி உதவி இன்ஸ்பெக்டர் பிரேமதாசாவும், சார்ஜன்ட் என். சண்முகநாதனும் மேற்கொண்டனர். சாட்சிகளைப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஜனூப் ஆர்ரி பரீத் ஆஜர் செய்தார்,

சடல பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி பி. நவரத்தினராஜா நடத்தினார்.

மரணமான தவதேவராணியின் கணவர் சந்திரபோஸ்சாட்சியமளிக்கையில் நானும்மரணமான மனைவியும் மிகவும் சந்தோஷமாகவே வாழ்ந்து வந்தோம். மரணமான சுதர்சன் எமது குழந்தை. நான் ஈராக் நாட்டிற்குச் சென்று தொழில் செய்ய விரும்பினேன். இதற்கான முயற்சியிலும் ஈடுபட்டேன் சம்பவதினத்திற்கு மறுநாள் நான் வெளிநாடு செல்வதற்கான நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறஇருந்தது. அதில் தோற்ற நான் ஆயத்தங்கள் செய்தேன் எனது மனைவிக்கு நான் வெளிநாடு செல்வதில் விருப்பமில்லை. ஈராக் நாட்டில் சண்டைநடப்பதாகவும் அங்கு செல்வது கூடாதென்றும் கூறினார் நான் அவர் சொல்வதைக் கேளாது வெளிநாடு செல்லத் தீர்மானித்து எனது முடிவை மனைவியிடம் கூறிவிட்டு அயல்வீடொன்றிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பினேன். வீட்டில் மனைவியையும் மகன் சுதர்சனையும் காணவில்லை. அயலவரான சின்னப்பு முத்துக்குமாருவும் நானும் கிணற்றில் சென்று பார்த்தோம். நீர்க்குமிழ் வெளியே வந்தவண்ணம் இருந்தது. கிணற்றில் தேடுதல் நடத்தினோம். பலன் கிடைக்கவில்லை. மூன்று நீர் இறைக்கும் இயந்திரஉதவியுடன் கிணற்றை இறைத்தோம். அப்போது மரணமான குழந்தையை அணைத்தவாறு மனைவி சடலமாகக் கிணற்றில் கிடப்பதுதெரிந்தது. இருவரையும் பிணமாக மீட்டோம்'' என்றார்.

சின்னப்பு முத்துக்குமாருவும் சாட்சியமளித்தார். தவதேவராணியின் மரணம் தற்கொலை எனவும் சுதர்சனின் மரணம் கொலை எனவும் பதில் நீதிபதி திரு கார்த்திகேசு தீர்ப்புவழங்கினார். (அ)

## கிருஷ்ணபுரம் ஜெயஇல்லத்தில் புதுவருடவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் ஜெய இல்லத்தில் புதுவருடவிழா வெகுசிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

இந்த இல்ல நிர்வாகி போதகர் எஸ். ஜோன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் 500 க்கும் மேற்பட்ட ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன் போதகர் ஜோன் தம்பதியினரால் நூற்றுக்கணக்கான சிறுவர்களுக்கு உடைகளும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன.

அருட்திரு. ஜெயரத்தினம் அடிகளாரின் அருளுரையும் இடம்பெற்றது. சமூகசேவையாளர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

# மறந்துவிட்ட..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### அள்ளிஅள்ளிக் கொடுத்தார்!

சிறப்பாக ஈழத்து மக்களுக்குத் தருமம் புரிவதற்கே பி. எஸ். உதித்தவர். திருமணம் ஆகியும் அவர் பிரமசாரியே. குழந்தைகள் இல்லையென்ற குறை அவரிடம் கிடையாது. எல்லாக் குழந்தைகளையும் தம்குழந்தைகளாக மதித்து வாழ்ந்தார். அவருடைய தம்பியாரின் மகனே மானிப்பாய்ப் பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் அவர்கள். டாக்டர் பி. எஸ். அவர்களின் உயர்ந்த குணத்தின் மற்றோர் உருவம் திரு தருமலிங்கம் ஆவர். தனக்கென வாழாத் தனிப்பண்பும் எல்லோரையும் சமமாகமதிக்கும் உளப்பாங்கும், உண்மைபேசும் இயல்பும் சிறந்த பேச்சுத்திறனும் கொண்டுள்ளமும் படைத்தவர் திரு தாமலிங்கம். மருத்துவ கலாநிதி புரிந்த தருமத்தின் பிரதிநிதி தருமலிங்கம். டாக்டர் புரிந்த தருமத்தின் பயனை நாட்டுக்குக்கிடைத்த நம்பியென்று சுருங்கக்கூறிவிடலாம். அவர் திருத்தொண்டு வாழ்க.

வைத்திய கலாநிதியின் உழைப்பினையும், கொடைத்திறனையும் யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்வி நிலையங்கள் சிறப்பாகப் பயன்படுத்தின. சைவவித்தியாவிருத்திச் சங்க இயக்குநர் தியாகி, நாவலருக்குப்பின் சைவத்தையும் தமிழையும் வாழவைக்க எண்ணி நூற்றுக்கணக்கான பாடசாலைகளையும் கல்லூரிகளையும் ஆசிரிய கலாசாலைகளையும் கட்டி நடத்திப் பணிபுரிந்த பெரியார் 'இந்துபோர்ட்' இராசரத்தினம் அவர்கள், வைத்திய கலாநிதியை நன்கு பயன்படுத்தித் தமது திருத்தொண்டுகளைச் சிறப்பாகச்செய்தனர். அன்றியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் பொற்காலத்தை உருவாக்கியவரும் பி. எஸ். அவர்களே. கல்லூரியின் தாபகர் கந்தையா உபாத்தியாயரின் மைத்துனர் இவர். கல்லூரிக்குக் காணிகள் வழங்கியும் ஆயிரம் ஆயிரமாக பணம் வழங்கியும் கல்லூரிக் கட்டிடங்களையும், விஞ்ஞானகூடங்களையும், நூல்நிலையத்தினையும், விடுதிச்சாலைகளையும், விளையாட்டு மைதானங்களையும் உருவாக்க உறுதுணைபுரிந்தவர் வள்ளல் டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள்.

இவர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முகாமையாளராக இருந்தபொழுது ஆசிரியர்க்கும் மாணவர்க்கும இலவச மருத்துவச்சிகிச்சை அளித்தார். இன்னும் ஆசிரியர்களுக்கும் அவசரமாகப்பணம்தேவைப்பட்டால் ஆயிரக்கணக்கில் கொடுத்து உதவினார். வட்டியின்றி அதனைத்திருப்பி வாங்கிக்கொள்வார். சிலரின் நிலையுணர்ந்து பணத்தைத் திரும்பிவாங்காமல் விட்டும்விடுவார்,

ஆசிரியர்க்குமுதற்பணம்வழங்கியும் இனும் வழங்கியும் துணைபுரிந்தவர். இவரைப்போன்ற முகாமையாளரையோ மருத்துவநிபுணரையோ இனிஎங்கே காண்போம்? அவர் யாழ்ப்பாண நகரின் தனிப்பெரும் புதல்வர்; மனிதருள் மாணிக்கம். அவருடைய கைகள் கொடுத்துச் சிவந்தவை; அவருடையவாய், வாய்மையுரைத்த உண்மையான வாய்! அவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். தமிழர் நாகரிகம் தலைசிறந்து நின்ற சங்ககாலத்தில் வாழ்ந்த சான்றோர்களையும், வள்ளல்களையும் தியாகிகளையும் நினைவூட்டும் டாக்டர் சுப்பிரமணியம் போன்றபண்பாளர்கள் வாழ்ந்ததனாற்றான் உலகம் என்றும் அழியாதுநிலைத்துநிற்கின்றது. இனியாவது அவர் நினைவு நாளைக் கொண்டாடுவோம். நன்றிக்கடமையைத் தெரிவிப்போம்.

## நாளைநடக்கும் பொங்கல்விழா

(சுழிபுரம்)

மூளாய் சித்திவிநாயகர்கோவில் முன்றலில் சட்டத்தரணி திரு இ.த. விக்கினராசா தலைமையில் நாளை வியாழக்கிழமை மாலை பொங்கல்விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் எதிர்க்கட்சி முதல்வர் திரு அ.அமிர்தலிங்கம், கூட்டணி தலைவர் திரு மு.சிவசிதம்பரம், யாழ் எம்.பி திரு வெ.யோகேஸ்வரன், கோப்பாய் எம்.பி. திரு மு.ஆலாலசுந்தரம் உட்படப் பலர் சிறப்புரையாற்றுவர். (அ)

## மாரிமுத்து சுவாமிகள் சிவபதமடைந்தார்

[யாழ்ப்பாணம்]

இணுவில் காரைக்கால் ஸ்ரீநடராஜ முனிவர் ஆச்சிரமத்தில் விபூதிச் சிவதொண்டு செய்துவந்தவரும் கடந்தநாற்பது ஆண்டுகளாக ஆன்மீக சேவையில் ஈடுபட்டு சிவத்தியானத்தில் திளைத்துவருமாகிய விபூதி ஸ்ரீ மாரிமுத்து சுவாமிகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுஷ நட்சத்திரத்தில் சிவபதமடைந்தார். சமாதிக் கிரியைகள் இணுவில் காரைக்கால் ஸ்ரீநடராஜமுனிவர் ஆச்சிரமத்தில் இன்று புதன் காலை 9 மணிக்கு நடைபெறும். [அ]

## சலுகை வேண்டாம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் எனக்கோபாராளுமன்ற உறுப்பினருக்கோ விசேட சலுகை காட்டவேண்டும் என்று நான்கேட்கவில்லை.

''கிளிநொச்சி தொகுதியின் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை தமிழ்மக்களின் பெருந்தலைவரான நீங்கள், எக்காரணம் கொண்டும் மறந்திருக்கமாட்டீர்கள். மறந்திருக்கின் அதை ஞாபகமூட்ட வேண்டியது என்கடமை.

''நீங்கள் அக்கூட்டத்தின் மேடையில் பேசிக்கொண்டிருந்தபோது பூநகரியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மேடையில் ஏறி இதுபற்றிக் கேட்டபோது நீங்கள் பகிரங்கமாக தொகுதிகளில் கிடைத்த வாக்குகள் எண்ணிக்கை அடிப்படையில் பட்டியலை மாற்றி அமைப்பதாகவும்,கிளிநொச்சி தொகுதிமக்கள் நினைத்தால் திரு. கிருஷ்ணராசாவை 11ம் இடத்திலிருந்து4ம்இடத்திற்கு கொண்டுவர முடியும் என்று கூறினீர்கள். இதனை தொகுதி மக்கள் நிலைநாட்டி காட்டினார்கள் இதனை செயல்படுத்த வேண்டியது தாங்கள் கடமை.

''பல்லாயிரக்கணக்கான மக்களை வழிநடத்தவேண்டிய தாங்கள் கொடுத்த வாக்குறுதியை காலங்கடத்தாது நிறைவேற்ற நடவடிக்கைஎடுக்காது அங்கும் இங்கும் அவர் இவர் கூறியதை சாட்டாக வைத்து தட்டிக்கழித்து வருவது தலைமைப் பீடத்தில்மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மேலும் பாதிக்கும் என்பதை நீங்கள் அறியாமல் இருக்க முடியாது.

''தங்கள் வாக்குறுதிக்கு அமைய 1ம், 3ம், 9ம உறுப்பினர்களை தவிர ஏனையோரின் பெயர்களை வாக்கு விகிதாசாரப்படி மாற்றி அமைப்பதே ஜனநாயகமரபு. நான் இன்றுவரை எந்த லட்சியத்திற்கு வாழ்ந்தேனோ அதே லட்சியத்திற்குத் தொடர்ந்து வாழ்வேன். (க)

கூட்டுறவு இயக்கம்:

# "வடக்கில் அரசியல் தலையீடுகள் இல்லை!"

## உதவி ஆணையாளர் பெருமிதம்

[மாவிட்டபுரம்]

"கூட்டுறவு இயக்கத்திலே அரசியல் தலையீடு இருக்குமானல் கூட்டுறவு சீரழிந்துவிடும்! மட்டக்களப்பில் கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் தலையீடுகள் இருக்கின்றன. இதனல் அங்கு கூட்டுறவு இயக்கம் சீரழிந்துகொண்டே போகிறது. ஆனல் வடக்கில் அவ்வாறு அரசியல் தலையீடு எதுவும் இல்லாதிருக்கிறது. மக்களே கூட்டுறவு இயக்கத்தை வளர்த்து வருகிறுர்கள்''.

இவ்வாறு தையிட்டி ப.நோ.கூ.சங்க கிளை புதிய கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து பேசிய யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. பாலசுந்தரம் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:- "நான் மட்டக்களப்பில் கூட்டுறவு உதவி ஆணையாளராகக் கடமையாற்றி அண்மையில் இங்கு இடமாற்றம் பெற்றுவந்துள்ளேன். இங்கு கூட்டுறவு இயக்கம் சிறப்புற்று விளங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். கூட்டுறவில் நேர்மை அவசியமானது. நேர்மையீனமான நடவடிக்கைகளால் மட்டக்களப்பில் ஏராளமான சோர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. இது கூட்டுறவு இயக்கத்திற்கு நல்லதல்ல'' என்றுர்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சிறந்த ஓர் சங்கமாக விளங்குவது குறித்து பாராட்டுவதாகவும் அவர் கூறினர்.

தெல்லிப்பழை பனநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு எஸ். சிவமகாராஜா பேசுகையில்; இப்பகுதிக் கூட்டுறவாளர்களும், பொதுமக்களும் அளிக்கும் ஆதரவால் சங்கத்தைச் சிறப்பாக இயக்கி வருவதாகவும், மக்களது தேவைகளை அறிந்து அதற்கமையப் பணிபுரிந்து வருவதாகவும், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் இலங்கையிலேயே சிறந்த சங்கமாகத் திகழ்வதாகவும் குறிப்பிட்டார்.

தேசிய கூட்டுறவு சபை யாழ். மாவட்ட செயலாளர் திரு.எஸ், சிவசுப்பிரமணியம், கிளைக்குழுத் தலைவர் திரு. வல்புரம் ஆகியோரும் பேசினர்.

## இவர்கள் கூடி ஆராய்வார்கள்

[நீர்வேலி]

அகில இலங்கை விஸ்வகம சங்கத்தினர் இம்மாதம் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தலைவர் திரு. த. க. பொன்னுத்துரை தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள மலாயன் பென்சனியர் சங்க மண்டபத்தில் கூடி திருக்கேதீஸ்வரத்தில் "துவஷ்டா மணிமண்டபம்'' அமைப்பது சம்பந்தமாக ஆராயவுள்ளனர். [அ]

## மயிலிட்டி கொலை: குற்றப்பத்திரம் தாக்கல்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி கொலைச் சம்பவம் தொடர்பாக றிமாண்டிலுள்ள சந்தேக நபர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மயிலிட்டியைச் சேர்ந்த சீனியர் துரைச்சாமி என்பவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்தது தொடர்பாக கந்தையா பாலசிங்கம், இளையகுட்டி கதிரமலை ஆகியோர் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள்மீது கொலைக் குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தனர்.

இச்சந்தேக நபர்களிடம் குற்றவாளியா, சுற்றவாளியா எனக் கேட்டபோது அவர்கள் சுற்றவாளிகள் எனக்கூறினர். இதனையடுத்து வழக்கை விசாரணை செய்வதற்காக இம்மாதம் 24ம் திகதிக்கு நீதிபதி திரு சி. வி. விக்னேஸ்வரன் ஒத்திவைத்தார். வழக்காளி தரப்பில் காங்கேசஸ்துறை பொலிசாருடன் சட்டத்தரணி ஆர். ஜெ. செல்வரத்தினம் ஆஜரானுர்.

## மீனவர் தங்குமடம்

(புலோலி)

பருத்தித்துறை முனையில் மீனவர்களின் நன்மைகருதி 40,000 ரூபா செலவில் மீனவர் தங்குமடமொன்று அமைக்கப்பட்டுள்ளது:

மீனவ6 தங்குமடம் அமைப்புக்கான நிதியைப் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார். இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் இம்மீனவர் தங்குமட அமைப்பு வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்து முடித்துள்ளது,

## கிளிநொச்சியில் விவசாயிகளுக்கு ஓய்வு விடுதி

(கிளிநொச்சி)

வடபகுதி விவசாயிகளின் நலன் கருதிக் கிளிநொச்சியில் உள்ள வடபிரதேச விவசாய சேவைக்காலப் பயிற்சிநிலையத்தில் விவசாயிகளுக்கான இளைப்பாற்று விடுதி அமையவுள்ளது. யாழ்ப்பாணம். முல்லைத்தீவு, வவுனியா மன்னர் ஆகிய மாவட்ட விவசாயிகள் விவசாயம் பற்றிய ஆலோசனை பெறவும், பயிற்சி பெறவும் கிளிநொச்சிக்கு வரும் போது தங்குவதற்கான விடுதி வசதியின்றி அவதியுறுகின்றனர். இவர்களின் நிலையை உணர்ந்த விவசாய உதவிப்பணிப்பாளர் திரு. கே. வரதராசா விவசாயிகளுக்கான ஓய்வு விடுதி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கண்டுள்ளாரர். (அ)

## றெக்கிளமேசன் சனசமூக நிலையம் வெற்றி

[யாழ்ப்பாணம்]

குருநகர் சனசமூக நிலைய 35-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிரிக்கட்மென்பந்தாட்டப் போட்டியில் றெக்கிளமேசன் சனசமூக நிலையம் வெற்றிபெற்றது.


முதலில் துடுப்பெடுத்தாடிய றெக்கிளமேசன் சனசமூகநிலையம் 22 ஓவர்களில் 134 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்துத் துடுப்பெடுத்தாடிய நெய்தல் வளர்பிறை மன்றம் 30 ஓவர்களில் 131 ஓட்டங்களைப் பெற்றது.

றெக்கிளமேசன் கோஷ்டிக்கு திரு. போலும், நெய்தல்வளர்பிறை மன்றத்திற்கு திரு. அன்ரனும் தலைமைதாங்கினர்.


## மாபெரும் காணி விற்பனை

கைதடி சந்தி — கண்டி வீதி,

18 வீடு கட்டக்கூடிய காணிகள் 18




Scale : 1: 2000.

மேலதிக விபரங்கட்கு:-

தோட்டக்காணிப் பிரிவு

TFC

த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்

249, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 021-23680



சுவையின் மறுபெயர்

றிக்கோ

ஐஸ்கிறீம் வகைகள் என்றுல்
உங்கள் நினைவில் வருவது

'றிக்கோ'

திருமணவைபவமா?
பிறந்ததினமா? பிரியாவிடையா?

குதூகலமான எல்லா
கொண்டாட்டங்களிலும்

'றிக்கோ' வின்

* கோழி புறியாணி
* இடியப்ப புறியாணி
* நூடில்ஸ்

வழங்கி மகிழ்வியுங்கள்!

குறிப்பு: ஆடர்கொடுத்து தொகையாகவும் பார்சல்களாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22464, 23889

# "சிவலிங்கம் இல்லாத கோவில் முழுமையான இந்துக்கோயில் அல்ல!

## சுப்பிரமுனிய சுவாமிகள் அருளுரை

### இந்துக்கள் சிவமார்க்கத்தில் ஈடுபடுமாறும் அறிவுரை

(மாவிட்டபுரம்)

"இந்துக்கோவில் ஒவ்வொன்றிலும் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படவேண்டியது அவசியமாகும். சிவலிங்கம் இல்லாத கோவில் முழுமையான கோவில் அல்ல. இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு வந்த பிரபல ஸ்தபதி ஒருவர் கூட இதனை வலியுறுத்தினார். ஆகவே சகல கோவில்களிலும் சிவலிங்கத்தை நாம் பிரதிஷ்டை செய்யவேண்டும்".

இவ்வாறு அமெரிக்காவிலிருந்து வருகை தந்துள்ள ஸ்ரீசிவாயசுப்பிரமுனிய சுவாமிகள் ஏழாலையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் அருளுரையாற்றும்போது கூறினார்.

மல்லாகம் சந்தியிலிருந்து வரவேற்பு வைபவம் இடம்பெற்ற ஏழாலை மகாவித்தியாலயம் வரை சுவாமிகளும், அவரது சீடர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வீதியெங்கும் மகரதோரணங்களும், வாழைகளும் கட்டப்பட்டு வீடுகள் தோறும் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டு பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

ஊர்வலத்தையடுத்து ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் சங்கத்தலைவர் திரு. சி. சக்திகிரீவன் தலைமையில் ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடந்த வரவேற்பு வைபவத்தில் சுவாமிகள் அருளுரையாற்றுகையில் மேலும் கூறியதாவது!

"முன்னர் அரசர்களால் எமது இந்துமதம் பேணிவளர்க்கப்பட்டு வந்தது. பின்னர் அரச பரம்பரைகள் அழிந்ததால் எமது மதமும் குன்றும் நிலை ஏற்பட்டது. தற்போது மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ந்து வருகிறது. ஆனாலும் இந்து சமயம் ஒழுங்கான, சீரான சமயம் இல்லையென சிலர் கூறுகிறார்கள். ஆகவே எமது இந்துமதத்தை மேலும் வளர்த்து முன்னையநிலைமைக்கு கொண்டுவரவேண்டியது எமது கடமையாகும்.

"இந்துமதம் பரவியுள்ள நாடுகள் யாவற்றிலும் இந்துக்களுக்குவழிகாட்டியாகவிருந்து அவர்களை இந்துப்பண்பாட்டின் அடிப்படையில் வாழச்செய்வதற்கு குழுக்கள் அமைக்கப்படவேண்டும். இந்த குழுக்கள் அந் நாடுகளிலுள்ள ஆலயங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதையும், இந்துமதகுருமார் ஒழுங்காக பேணப்படுகிறார்களா என்பதையும் கண்காணிக்கவேண்டும். எமது சிறுவர்களுக்கு இந்துமத உண்மைகளைப் புகட்டி அவர்களை சிறந்த இந்துக்களாக வளர்த்தெடுக்க ஆவனசெய்யவேண்டும். சமயத்தைபோதிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். இதன்மூலம் இந்துமதம் மேலும் வளர வழிபிறக்குமாதலால் மேற்படி குழுக்களை அமைக்க நாம முன்வரவேண்டும். அத்துடன் சைவமத பீடங்கள், சுவாமிகள், தொண்டர்கள் ஆகியோரையும்பேணி இந்துமத வளர்ச்சிக்காக அவர்களை பணிபுரிய ஊக்குவிக்க வேண்டும்.

"இந்துக்கள் யாவரும் சிவமார்க்கத்தில் ஈடுபடவேண்டும். சிவனை வழிபடுவது எல்லா தெய்வங்களையும் வணங்குவதற்கு ஒப்பானது. பல ஆண்டுகளுக்கு முன்பு இந்துக்கள் கிறிஸ்தவர்களாகவும், கிறிஸ்தவர்கள் இந்துக்களாகவும் மாறும் நிலை இருந்தது. ஆனால் இன்று அப்படியான நிலை இல்லை. இந்துக்களாகிய உங்களை யாராவது மதம் மாற்ற வந்தால் அவர்களுக்கு சிவனைப்பற்றிப் போதியுங்கள். அவரையே இந்துவாக மாற்றிவிடுங்கள். இந்துக்கள் தமது மதத்தில் அசையாத பற்றும் நம்பிக்கையும் கொண்டு செயல்பட்டால் இந்துமதம் வளர முடியும் என்றார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இன்னிசை விரிவுரையாளர் பிரமஸ்ரீ கோடிலிங்க சாஸ்திரிகள் பேசுகையில், சுப்பிரமுனிய சுவாமிகளது தவ வேடம் எமக்கெல்லாம் சைவ உணர்வை ஏற்படுத்துகிறது. அவரது வழிகாட்டலில் நாம் சிறந்த சமயவாதிகளாக திகழ்வோம் என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசார்யசுவாமிகள் பேசுகையில், இந்துமதம்பற்றியே அறியாத நாடுகளில் இந்துமதத்தின் பெருமைகளை எடுத்துக்கூறி மறுசமயத்தவரையும் இந்துமதத்தில் ஆர்வம் கொள்ளச் செய்து பெரும் தொண்டாற்றிவரும் சுப்பிரமுனியசுவாமிகளை சைவ உலகம் பெரிதும் பாராட்டுகிறது என்றார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் உரையாற்றினார். பண்டிதர் மு. கந்தையா சுவாமிகளுக்கு பாராட்டுப்பத்திரம் வாசித்தார். சிறுவர்களது சொற்பொழிகளும் இடம்பெற்றன.

## திசைமாறிய மாணவி

# கல்லூரிக்கு புறப்பட்டவர் காதலனுடன் சென்றார்!

(கிளிநொச்சி)

பரீட்சை எடுப்பதற்கென்று சிவப்புப் பூ போட்ட அழகிய ரை கட்டி கல்லூரிச் சீருடையுடன் மகளிர் கல்லூரி நோக்கிச் சென்ற பதினேழு வயது மாணவி பரீட்சை மண்டபம் செல்லாது காதலனுடன் சென்றுவிட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் கிளிநொச்சி விக்சன் வீதியைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவி பரீட்சை முடிவடைந்து மாலையாகியும் வீடு வந்து சேராததைத் தொடர்ந்து பரபரப்படைந்த பெற்றோர் பிரஸ்தாப பாடசாலைக்குச் சென்று தேடுதல் நடத்தினர். மகள் பரீட்சை எழுத வரவில்லை என்ற அதிர்ச்சித் தகவல் அவர்களுக்கு அங்கு காத்திருந்தது. பின்னர் பல இடங்களிலும் தேடுதல் நடத்தினர், அங்கெல்லாம் ஏமாற்றமே அவர்களுக்குக் கிடைத்தது. கவலை அடைந்த பெற்றோர் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் கிளிநொச்சிப் பொலிசாரின் உதவியை நாடினர்கள். பரீட்சை எழுதச்சென்ற மகளைக் காணவில்லை என மாணவியின் தகயார் பொலிசில் புகார் செய்தார்.

விசாரணையின்பின் பிரஸ்தாப மாணவி தனது காதலனுடன் மற்றுமோர் கிராமத்திற்குச் சென்றுவிட்டதாகத் தெரியவந்தது (அ)

# தடியடிமோதல்:காயமுற்றவர் இருவாரத்தின் பின்மரணம்!

(வவனியா)

இரு பிரிவினருக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இருவாரத்தின் பின்னர் மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர். மேலும் இருவரை தேடிவருகின்றனர்.

இச்சம்பவம் ஒட்டுசுட்டான் பொலிஸ் பகுதியில் நடந்துள்ளது.

ஞானப்பிரகாசம் என்பவரே தாக்குதலின்போது காயப்பட்டு மரணமாகியுள்ளார்.

இது பற்றி தெரியவருவதாவது:

சம்பவதினம் இரு குழுவினருக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து மோதல் ஏற்பட்டது. இம்மோதலில் தடியடிப்பிரயோகத்தின்போது இறந்த நபர் பலத்த தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தீவிர சிகிச்சையளிக்கப்பட்டபோதும் இந்த நபர் இருவாரத்தின் பின்னர் யாழ் ஆஸ்பத்திரியிலே மரணமாகியுள்ளார் என்று ஒட்டுசுட்டான் பொலிசார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக சந்தேகத்தின்பேரில் ராஜகுமார் என்பவர் பொலிசாரால் கைதுசெய்ப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (கி)

## இவர்களுக்கு புலமைப்பரிசில்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 4மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் கிடைத்துள்ளது.

இவர்கள் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் வழங்கப்படவுள்ள புலமைப்பரிசில் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

## யாருடையது?

யாழ். முஸ்லீம் கல்லூரி வீதியைச் சேர்ந்த திரு, ஏ. ஆஸன் என்பவர் காங்கேசன்துறை வீதியில் இரண்டு அடையாள அட்டைகளுடனும், வேறு சில தஸ்தாவேஜுகளுடனும் ஒரு 'என்வலப்' பினைக் கண்டெடுத்து "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

## புதிய நிர்வாகிகள்

(கோண்டாவில்)

கொககுவில் மயான பராமரிப்பாளர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. பொ. இன்னத்துரை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

தலைவர்;- திரு. பொ. இன்னத்துரை, உப தலைவர்கள் திருவாளர்கள் சு. நாகலிங்கம், நா. நவரத்தினராசா, செயலாளர் திரு. ந. சிவராசா, உப செயலாளர் திரு. க. தர்மலிங்கம், பொருளாளர் திரு. சி. மகாதேவகுமார், கணக்காய்வாளர் திரு. சந்திரகுமார், மற்றும் நிர்வாக சபையில் 9பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் மயானத்தைச் சிரமதான அடிப்படையில் திருத்தியமைப்பதெனவும், இதனைப் பயன்படுத்துகின்ற அனைவரையும் அங்கத்தவராகச் சேர்ப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது, (கு)


வெலிங்டன் (மானிப்பாய்) தினசரி- 6-15, 9-15 சனி.ஞாயிறு2-30 ஒரு கை ஓசை

ராஜா யாழ்.நகர் தினசரி 4 காட்சிகள் பாக்கியராஜ் - சரிதா மௌனகீதங்கள் (ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள் CAPTAIN AMERICA

12-1-83 மட்டும் தினசரி 4 காட்சிகள் ரீகல் (யாழ். நகர்) நான் (ஈஸ்ட்மன் கலர்) 14 முதல் எங்கவீட்டுப்பிள்ளை

மனோகரா (யாழ்நகர்) தினசரி10-30, 2-15, 4-45, 7-00, 9-30. MELGIBSON in MAD MAX 2 (Action packed thriller—Adults Only)

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் ரஜீவ் : ஜோதி ரயில் பயணங்களில் (கலர்)

லிடோ (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி-ஜெயலலிதா சவாலேசமாளி

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30 OUT LAND

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30 சிவாஜி - விஜயா - நம்பியார் நடித்த ராமன் எத்தனை ராமனடி

தித்திக்கும் தைத்திருநாள் திரைவிருந்து! சாந்தி யாழ்நகர் 10-30, 2-30, 6-30, 9-45 எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, அசோகன் நம்பியார், நாகேஷ் ராமன் தேடிய சீதை [புத்தம் புதிய வண்ணப்பிரதி]

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்) 3-வது HOUSE FULL அலைமோதும் பெண்கள் கூட்டம் ஆனந் [சிவாஜி கணேசன்] தன்னுடைய காதலிக்காக (வாணிஸ்ரீ) கட்டிய மாளிகை உங்கள் குடும்பத்துடன் விஜயம்செய்யுங்கள் ✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ் "வசந்தமாளிகை" [கலர்] (இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

துப்பாக்கிச் சூடுகளிலிருந்து

# பட்டிருப்பு எம்.பி. மயிரிழையில் தப்பினர்!

(கொழும்பு)

பட்டிருப்பு எம். பி திரு பி. கணேசலிங்கத்தின் கார் மீது நடந்த சனிக்கிழமை அதிகாலை மூன்று மணியளவில் ஹபரணை தம்புள்ள வீதியில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

ஹபரணை -தம்புள்ள வீதியில் உள்ள பெல்வெஹற என்னும் பண்ணைக்குச் சிறிது தூரத்தில் வைத்து திரு. கணேசலிங்கமும் வேறு ஒருவரும் கொழும்பிலிருந்து மட்டக்களம்புக்கு வந்துகொண்டிருக்கையில் அவர்கள் வந்த காரை நிறுத்தும்படி இருவர் கைகளால் சைகை காட்டியதாகவும் அவர்கள் துப்பாக்கி வைத்திருந்ததாகவும் திரு. கணேசலிங்கம் நிறுத்தாது தமது காரை வந்த திசைக்கு பின்புறமாகச் செலுத்தினர் என்றும் இதனை அடுத்தே கார்மீது பலதடவைகள் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. துப்பாக்கிச் சூடுகளின் மத்தியில் திரு. கணேசலிங்கம் துணிவுடன் பின்புறமாக தமது காரைச் செலுத்திச்சென்று தம்பி தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் இது பற்றி முறையீடுசெய்துள்ளார்.

பட்டிருப்பு எம். பி. யின் கார்மீது பத்து துப்பாக்கிவேட்டுகள் தீர்க்கப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [உ]

## மரண அறிவித்தல்

### நடராசா கனகச்சந்திரன்

கொலன்கலட்டி நடராசா கனகச்சந்திரன் அகால மரண மானார். இவர் இரத்மலானை நீர்விநியோகப் பகுதிப் பொறுப்பதிகாரியும், பரமேஸ்வரியின் அன்பு கணவரும், ரவிசங்கர், ரவிகாந் ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் இலக்கம் 2, ஆத்தியடி வீதியிலிருந்து தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 5813

## மரண அறிவித்தல்

### V. தம்பிராஜா

வெல்லாவ இளைப்பாறிய P.W.D. ஓவசியர் வ. தம்பிராஜா காலமானார் இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் கணவரும் கல்வளை சண்டிலிப்பாய் Dr. T. கோபாலசிங்கம் J P யின் தந்தையும் சிவபாக்கியவதியின் மாமனும், வசந்தகுமாரி இராஜேந்திரா U.K), தயாவதனி குணரத்தினம், சிவலோஷனி மனோகரன் (U. K). சிறிதரன் விரிவுரையாளர் (U K ). பிரபாகரன் அபூடாபி ஆகியோரின் பேரனும் ஔவை, ராதை, ஈசன், லக்ஷ்மன், தக்ஷாயினி, ஜாமினி ஆகியோரின் பூட்டனுமாவார். அன்னாரது பூதவுடல் 12-1-83 மாலை 4 மணிக்கு சண்டிலிப்பாய் இல்லத்திலிருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு ஈமக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
Dr. T. கோபாலசிங்கம் J. P.
கல்வளை, மானிப்பாய்.

5814

### தமிழக மனைவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணம் காதல் மணம் என்றும் திருமணமாகி நான்கு மாதங்களுக்கு பின்னர் இலங்கை புறப்பட்டவரை இன்றுதான் நீதிமன்றத்தில் கண்டதாகவும் மகனும்கூட இன்றுதான் தனது தந்தையை முதலில் கண்டதாகவும் பனாகொடையில் காவலில் உள்ள காலத்தில் மாதந்தோறும் தமது கணவனிடமிருந்து கடிதம் வரும் என்றும் கூறினர்.

### முதியோர் தினம்

[கிளிநொச்சி]

இயக்கச்சி முகாவிலில் முதியோர் தினம் வெகு சிறப்பாக அண்மையில் கொண்டாடப்பட்டது விசேட சேவை அலுவலர் திரு. தியாகராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வயோதிபர்களுக்கு உணவு, உடை வழங்கப்பட்டது.

கோவில்வயல், முகாவில் ஆகிய பகுதிகளின் கிராமோதய சபைத்தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர். [கி]

வர்த்தக தகுதி தேர்வு

# இறுதிப் பரீட்சை இரு வாரத்தில் நடக்கும்

(கோண்டாவில்)

பல்தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கான வர்த்தக தகுதித் தேர்வு மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை இரண்டுவார காலத்தில் நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல் தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் இப்பரீட்சையை ஒருமாத காலத்திற்கு ஒத்திவைக்குமாறு உயர்கல்வி அமைச்சின் செயலாளரையும், பரீட்சை ஆணையாளரையும் தந்திமூலம் கேட்டுள்ளார்கள்.

இவர்கள் இது சம்பந்தமாக நல்லூர் எம். பி யுடன் தொடர்பு கொண்டுள்ளனர். தமது இந்தியில் வர்த்தக தகுதித் தேர்வு மூன்றும் வருட பெறுபேறுகள் இன்னும் வெளியாகாமல் இருக்கின்றது என்றும்சுட்டிக்காட்டியுள்ளனர். [க]

### 50 அடி உயரத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கையளித்துக்கொண்டிருந்த சமயம், அவர் தூண் ஒன்றில் சாய்ந்தபோது சுமார் 50 அடி உயரத்திலிருந்து வெளிப்பக்கத்தில் வீழ்ந்ததால் மரணமானார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவருடன் பணியாற்றிக் கொண்டிருந்த சுமதபாலா என்பவர் அச்சமயம் உள்பக்கத்தால் விழுந்ததால்,கைமுறிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## சவூதி அரேபியாவிற்கு கட்டட வேலையாட்கள் உடனடியாகத் தேவை

| | | | |
|---|---|---|---|
| 1. | போமன் | Foremen | USD 250-00 |
| 2. | பைப்பிற்றர் | Pipe Fitters | USD 225-00 |
| 3. | வெல்டர் | Welders | USD 225-00 |
| 4. | றிகர் | Riggers | USD 225-00 |
| 5. | மெக்கானிக் | Mechanics | USD 250-00 |
| 6. | பெயின்ரர் | Painters | USD 200-00 |
| 7. | தச்சர் | Carpenters | USD 225-00 |
| 8. | மேசன் | Bricklayars – Masons | USD 225-00 |
| 9. | எலக்ரிசன் | Electricians | USD 225-00 |
| 10. | இன்சுலேசன் வேலையாட்கள் | Insulation Workers (Hot/Hold) | USD 250-00 |
| 11. | இயக்குனர் கனஇயந்திரம் | Operator (Heavy Equipment) | USD 300-00 |
| 12. | கனவாகன சாரதி | Truk Driver | USD 275-00 |
| 13. | பயிற்சியற்ற தொழில் கூலியாட்கள் | Unskelled Laboures | USD 150-00 |
| 14. | சாதாரண கூலியாளர் | Common Laboures | USD 125-00 |
| 15. | மேற்பார்வையாளர் | Supervisor | USD 250-00 |
| 16. | கணக்காளர் | Accountant | USD 300-00 |
| 17. | எழுது வினைஞர் | Clerk | USD 225-20 |
| 18. | தட்டெழுத்தாளர் | Typist | USD 225-00 |
| 19. | பாதுகாப்பு உத்தியோகத்தர் | Security Officer | USD 200-00 |
| 20. | களஞ்சியப் பொறுப்பாளர் | Store Keeper | USD 200-00 |
| 21. | கார்ச் சாரதி | Car Driver | USD 175-00 |
| 22. | சமையல்காரர் | Cooks | USD 200-00 |
| 23. | உதவியாளர் | Helpers | USD 125-00 |

### சலுகைகள்

அ. இலவச உணவும், இருப்பிடவசதியும்
ஆ. இலவச காப்புறுதி
இ. இலவச வைத்திய உதவி
ஈ. வருட இறுதியில் ஒரு மாத சம்பளம் போனஸாக வழங்கப்படும்.
உ. திரும்பிவரும் இலவசப் பிரயாணச் சீட்டு

கடவுச்சீட்டு, தொழில் அனுபவ சான்றிதழுடன் கீழ்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

## மித்திரா என்ரர்பிறைஸஸ்

ஆஸ்பத்திரி வீதி,
தெல்லிப்பளை.

தொழில் அனுமதிப்பத்திரம் இல:- 257
தொழில் அலுவலகம் இல:- FE/6/FEA/3824
(5810)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும்
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும்

## மற்றுமொரு சொகுசான பஸ்சேவை

மங்களகரமான 16-01-1983 ஞாயிற்றுக்கிழமை
மாலை 8-30 முதல் சேவை ஆரம்பமாகின்றது

# பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

## அசோக் லெயிலன்ட் சொகுசு பஸ்சேவை

இதமான, மகிழ்ச்சியான, சிரமமின்றி உல்லாசமான பயணத்தை மேற்கொள்ள சிறந்த பஸ்சேவை

இலங்கையில் ரி வி. பார்ப்பதற்கு வசதியாக, T.V. டெக் பொருத்தப்பட்டுள்ளது தினமும் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட புதிய திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்புண்டு.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் மாலை 8-30 மணி | (ஒருவழிப் பாதை) | கொழும்பு காலை 5-30 மணி |
| கொழும்பு மாலை 8-30 மணி | | யாழ்ப்பாணம் காலை 5-30 மணி |

## கட்டணம் ரூபா 65/00 மட்டுமே

குறிப்பிட்ட இடங்களில் தரித்துச் செல்லலாம். ஒவ்வொரு பிரயாணிக்கும் விபத்து நஷ்டஈட்டுக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.

டிக்கட் பதிவு செய்யுமிடங்கள் :—

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். போன் ; 23166

செல்வா ஸ்ரோர்ஸ்
2/A, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். போன் : 23810

கொழும்பில் பதிவு செய்யுமிடங்கள் :—

மைசூர் கபே
வெள்ளவத்தை,
போன் : 82974

அஜந்தா ஹொட்டல் லிமிட்.
135, ஓல்ஹொட் மாவத்தை,
கொழும்பு—போன் : 32769, 26089

யாழ் நகரில் எழில் மாளிகை மலிகா பேணிச்சர் பலஸ்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100/36/81 Eelanadu - P. O. Box 49. Telegrams: Eelanadu, Telephone: 22389 — 24126.